மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ம் நாள் வியாழக்கிழமை

•••••••

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கனிமொழி | **அசல் வழக்கு எண்.** | - | 66/2024 |
| க/பெ. | - | பத்மநாபன் | **பி.சா.** | - | **2** |
| வயது | - | 33 | | | |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |
| வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |
| தொழில் | - | உதவி மின்பொறியாளர், TNEB, சித்தலிங்கமடம் | | | |

**30.10.2025.**

**முதல் விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததின் பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் சித்தலிங்கமடத்தில் உதவி மின்பொறியாளராக பணியாற்றி வருகிறேன். 1ம் பிரதிவாதி இலவச மின் இணைப்பு வேண்டி எங்களிடம் எந்த தேதியில் விண்ணப்பம் கொடுத்தார் என்றால் 26.06.2010 ல். அந்த விண்ணப்ப பதிவு எண். 122.

2. 1ம் பிரதிவாதி மட்டும் தான் இலவச மின்இணைப்பு கேட்டுள்ளாரா, அவருடன் சேர்த்து வேறு யாராவது கேட்டுள்ளார்களா என்றால் 1ம் பிரதிவாதி மட்டும் தான் கேட்டுள்ளார். எந்த தேதியில் அவருக்கு மின்இணைப்பு தயாராக இருக்கிறது என்று சொன்னோம் என்றால் 30.12.2021 ல் பழனிசாமிக்கு அறிவிப்பு கொடுத்து அதில் இலவச மின்இணைப்பு பெறுவதற்குண்டான ஆவணங்கள் கொண்டுவர சொல்லி சொல்லியிருந்தோம்.

3. 1ம் பிரதிவாதி எந்த சர்வே எண்ணிற்கு மின்இணைப்பு கோரியுள்ளார் என்றால் சர்வே எண்.88/4. 1ம்பிரதிவாதி இலவச மின்இணைப்பு கோரி கொடுத்துள்ள மனுவுடன் என்ன என்ன ஆவணம் இணைத்துள்ளார் என்றால் சிட்டா, அடங்கல், அ பதிவேடு, புல வரைபடம், வி.ஏ.ஓ.சான்று. புல வரைபடத்தில் சர்வே எண்.88/4 ல் கிணறு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடங்கலில் கிணறை பொறுத்து என்ன

சொல்லப்பட்டுள்ளது என்றால் 88/4 ல் பழனிசாமிக்கு கிணறு உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது.

4. 2022 ல் 88/4 ல் உள்ள கிணற்றில் நீர்வளம் இல்லை, அதனால் இலவச மின்இணைப்பிற்கு சர்வே எண். 88/2 பில் மாற்றம் செய்ய கோரி ஆவணங்கள் கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். அதில் என்ன என்ன ஆவணம் கொடுத்துள்ளார் என்றால் சிட்டா, அடங்கல், அ பதிவேடு, புல வரைபடம், வி.ஏ.ஓ.சான்று, இதனுடன் வட்டாட்சியரின் சொத்துரிமை சான்றும் சேர்த்து கொடுத்துள்ளார்.

5. 1ம் பிரதிவாதியின் மனுவின் பேரில் செயற்பொறியாளர் வந்து இடத்தை ஆய்வு செய்து 30.04.2022 அன்று சர்வே எண்.88/4 லிருந்து 88/2 பி -கு மின்இணைப்பிற்குறிய சர்வே எண்ணை மாற்றி உத்தரவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.88/2 பி-கு மாற்றக் கொடுத்த ஆவணங்களுடன் புல வரைபடம் கொடுத்துள்ளார், அந்த புல வரைபடத்தில் கிணறு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. 10.09.2020 ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை படி ஒரு கிணறு பலநபர்களுக்கு உரிமையாக இருக்கும் போது அதில் ஒரு பகுதி ஒருவருக்கு பாத்தியமாக இருந்தால் கூட்டு ஒப்புதல்தாரரின் ஆட்சேபணை பெற தேவையில்லை, இழப்பீடு பத்திரம் கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

7. கிணறு பல நபர்களுக்கு கூட்டாக இருந்தால் ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக மோட்டார் மின்இணைப்பு வாங்கி கொள்ளலாம் அதற்கு ஒரு நிபந்தனையாக தனி தனி நபர்களுக்கு 50 செண்ட் இருக்க வேண்டும். **மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தையும் சேர்த்து மூ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி ஆஜர், வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.